(இ) வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் காலரா நோய் பரவுதல் குறித்து.

* திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் உயிரோடு சம்பந்தப்பட்டிருக்கிற ஒரு மிகப் பெரிய பிரச்சினையை இந்த அரசினுடைய கவனத்திற்கு உங்கள் மூலமாகக் கொண்டு வருகிறேன். மழை இல்லாத காரணத்தினால் ஏற்பட்டுள்ள வறட்சியையொட்டி, காலரா நோய் மிகக் கடுமையாகப் பரவி குருங்குளம், பஞ்சாத்தி, வைரிவயல் போன்ற அறந்தாங்கி தொகுதியிலுள்ள சில கிராமங்களில் ஏறக்குறைய 35 பேர்களுக்கு மேலே பாதிக்கப்பட்டு, அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதில், ஐந்து பேர் இறந்து போனதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. இது மேலும் பரவக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இது புதுக்கோட்டை மாவட்டத்திலே மட்டும் அல்ல. வறட்சியாக இருக்கின்ற மற்ற மாவட்டங்களிலேயும் வெயில் கொடுமையாலும், தண்ணீர் இல்லாததாலும் இப்படி பரவ வசதியிருக்கிறது. நிறைய பரவும் நிலை இருக்கிறது. இதுகுறித்து அரசு அளவிலே விசாரித்து அரசு ஒரு அறிக்கையைத் தர வேண்டும். மருத்துவர் குழுவின் மூலமாக போதிய மருந்துகள் கொடுத்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். காலராவால் பாதிக்கப்பட்டிருக்கிற அறந்தாங்கி, இன்னும் மற்றப் பகுதிகளில் உள்ள மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று இந்த அரசை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு அது தொடர்பாக ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(ஈ) பிரதமரின் சென்னை வருகையையொட்டி இடிக்கப்பட்ட குடிசைகள் விவரம்.

திரு. கோ. வீரையன்: தலைவரவர்களே, இந்த அவையிலே கடந்த 15-ந்தேதி அன்று நடைபெற்ற விவாதத்தின்போது, மறைமலை நகருக்கு நம்முடைய இந்திய நாட்டின் பிரதமர் வந்த போது இடிக்கப்பட்ட குடிசைகள் சம்பந்தமாக விசாரித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்குத் தெரிவிப்பதாகச் சொன்னார்கள். இதுவரையில் அறிக்கை எதுவும் வைக்கப்படவில்லை. இன்னும் ஒருநாள் தான் அவை நிகழ்ச்சிகள் இருப்பதால் என்றைக்கு அறிக்கை வைக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.